## COMBINED GEOLOGY SUBORDINATE SERVICE IN EXAMINATION – 18/08/2023

### Computer Based Test

1. What is the period for the 14th Finance Commission has made its recommendations?
a. 2013-2018 **b. 2015-2020** c. 2014-2019
d. 2012-2017 e. Answer not known
எந்த காலகட்டத்திற்கான பரிந்துரைகளை 14வது நிதிக்குழு முன்வைத்தது?
a. 2013-2018 **b. 2015-2020** c. 2014-2019
d. 2012-2017 e. விடை தெரியவில்லை

2. In the below schemes, which is related to improve the nutritional and health status of the children in the age group 0-6 years
**a. Integrated Child Development Scheme**
b. National Rural Employment Programme
c. Nutrition Programme
d. Mahatma Gandhi Rural Employment Guarantee Scheme
e. Answer not known
பின்வரும் திட்டங்களில் எது 0-6 வயது குழந்தைகளின் ஊட்டசத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பானது?
a. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்
b. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்
c. ஊட்டச்சத்து வழங்கும் திட்டம்
d. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம்
e. விடை தெரியவில்லை

3. The Rural Infrastructure Development Fund (RIDF) was setup under
a. RBI **b. NABARD** c. SIDBI
d. IDBI e. Answer not known
கிராமபுற உள்கட்டமைப்பு முன்னேற்றம் நிதி _____ கீழ் உருவாக்கப்பட்டது.
a. இந்திய ரிசர்வ் வங்கி b. நாபார்டு c. சிட்பி
d. ஐடிபிஐ e. விடை தெரியவில்லை

4. The main objectives of monetary policy are
1) Exchange rate stability
2) Economic growth
3) Disequilibrium in the balance of payments
4) Neutrality of money
Which of the above is correct statement?
**a. (1) and (2)** b. (2) and (3) c. (1), (2) and (4)
d. (3) and (4) e. Answer not known
பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோள்கள்

1. பரிவர்த்தனை விகிதத்தில் நிலைத் தன்மை
2. பொருளாதார வளர்ச்சி
3. செலுத்து சமநிலையில் சமனற்ற நிலையை பேணுதல்
4. பணத்திறன் நடுநிலைத் தன்மை

மேற்கண்டவற்றில் எது சரியான விடை?

a. (1) மற்றும் (2) b. (2) மற்றும் (3) c. (1), (2) மற்றும் (4)
d. (3) மற்றும் (4) e. விடை தெரியவில்லை

5. Mahalanobis four sector model was applied for which of the following Five Year Plan?
a. First **b. Second** c. Third
d. Fourth e. Answer not known

மஹலனோபிஸ் நான்கு துறை மாதிரி பின்வரும் எந்த ஐந்தாண்டு திட்டத்தில் பயன்படுத்தப்பட்டது?
a. முதலாவது b. இரண்டாவது c. மூன்றாவது
d. நான்காவது e. விடை தெரியவில்லை

6. Garibi Hatao and 'growth with social Justice' related to which five year Plan in India?
**a. Fifth Five Year Plan** b. Fourth Five Year Plan
c. Third Five Year Plan d. Second Five Year Plan
e. Answer not known

'கரிபி கட்டாகோ, (வறுமை ஒழிப்பு) மற்றும் 'சமூக நீதியுடன் வளர்ச்சி' என்பது இந்தியாவின் எந்த ஐந்தாண்டுத் திட்டத்துடன் தொடர்புடையது?
a. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் b. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்
c. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் d. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்
e. விடை தெரியவில்லை

7. Major issues in Information Technology Sector consists of the followings
(i) Infrastructure and services
(ii) Electronic governance
(iii) Education
(iv) Mass campaign for IT awareness

a. (i) and (ii) only b. (i) and (iv) only **c. (i), (ii) and (iii) only**
d. (i), (ii), (iii) and (iv) e. Answer not known

தகவல் தொழில்நுட்ப துறையின் முக்கிய சிக்கல்கள் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.
(i) உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள்
(ii) மின்னணு நிர்வாகம்
(iii) கல்வி
(iv) தகவல் தொழில் நுட்பத்திற்கான விழிப்புணர்வு வெகுஜன பிரச்சாரம்

a. (i) மற்றும் (ii) மட்டும் b. (i) மற்றும் (iv) மட்டும் c. (i), (ii) மற்றும் (iii) மட்டும்
d. (i), (ii), (iii) மற்றும் (iv) e. விடை தெரியவில்லை

8. Which one of the statement is correct?
(i) Humayun Nama compiled by Gulbadan Begum
(ii) Baduni translated the Bagavatha purana into Persian
(iii) Todarmal translated the Bagavatha purana into Persian
(iv) Haji Ibrahim Sir hindi translated Atharvaveda

a. (i), (ii), (iii) are correct (iv) only incorrect
**b. (i), (iii), (iv) are correct (ii) only incorrect**
c. (i), (ii), (iv) are correct (iii) only incorrect
d. All are correct
e. Answer not known

கீழ்கண்ட கூற்றுகளில் சரியான கூற்று எது?

i) ஹுமாயுன் நாமா வை தொகுத்தவர் குல்பதன் பேகம்

ii) பதுனி பகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்

iii) தொடர்மால் பகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்

iv) ஹஜி இப்ராகிம் சர் இந்தி அதர்வ வேதத்தை மொழிபெயர்த்தார்

a. (i), (ii), (iii) சரியானது (iv) தவறானது

b. (i), (iii), (iv) சரியானது (ii) மட்டும் தவறானது

c. (i), (ii), (iv) சரியானது (iii) மட்டும் தவறானது

d. அனைத்தும் சரியானது

e. விடை தெரியவில்லை

9. Assertion [A]: Firoz Shah Tughlaq did not levy Jizya tax.
Reason [R]: His influential Minister Khan-i-Jahan Maqbul was a converted Hindu.

a. Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A].
b. Both [A] and [R] are true but [R] is not a correct explanation of [A].
c. [A] is true but [R] is false
**d. [A] is false but [R] is true**
e. Answer not known

கூற்று [A]: சுல்தான் பெரோஷா துக்ளக் 'ஜிஷியா' வரியை விதிக்கவில்லை
காரணம் [R]: அவரது புகழ் பெற்ற அமைச்சா கான்-ஈ-ஜகான் மக்பூல் மதம்மாறிய ஒரு இந்து ஆவார்.

a. [A] மற்றும் [R] சரியானது மேலும் [R] ஆனது [A] -க்கான சரியான விளக்கமாகும்.
b. [A] மற்றும் [R] சரியானது மேலும் [R] ஆனது, [A] -க்கான சரியான விளக்கமல்ல
c. [A] சரியானது ஆனால் [R] தவறானது
d. [A] தவறானது ஆனால் [R] சரி
e. விடை தெரியவில்லை

10. Which one of the following is incorrectly paired?

| Folk dance | | State |
|---|---|---|
| a. Karama | - | Bihar |
| b. Kathi | - | Bengal |
| c. Maya Shavari | - | Orissa |
| **d. Natha Ras** | **-** | **Assam** |

e. Answer not known

பின்வருவனவற்றுள் தவறான பொருத்தம் எது?

| கிராமிய நாட்டியம் | | மாநிலம் |
|---|---|---|
| a. கரமா | - | பீகார் |
| b. காதி | - | வங்காளம் |
| c. மாயசவாரி | - | ஒரிசா |
| d. நாதாரஷ் | - | அஸ்ஸாம் |

e. விடை தெரியவில்லை

11. Match correctly the Folk dramas with their corresponding states.

A. Kathakali — 1. Bengal
B. Yatra — 2. Maharashtra
C. Ainkiya Nat — 3. Kerala
D. Tamasha — 4. Assam

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. Answer not known

நாட்டுப்புற நாடகங்களை உரிய மாநிலங்களோடு பொருத்துக.

A. கதகளி — 1. வங்காளம்
B. யாத்ரா — 2. மகாராஷ்டிரம்
C. அங்கீய நாட் — 3. கேரளா
D. தமாஸா — 4. அஸ்ஸாம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

12. During Mughal rule ____ were the assistants of Subhadar in the maintenance of peace.
a. Amin b. Diwan c. Kotwal
**d. Faujdar** e. Answer not known

முகலாயர் ஆட்சியில் அமைதியைப் பேணுவதில் சுபேதாருக்கு உதவியாளராக ____ இருப்பர்.
a. அமீன் b. திவான் c. கொத்வால்
d. ∴பவுஜ்தார் e. விடை தெரியவில்லை

13. Select the order which gives the correct chronological order of the Gupta Emperors.
1. Kumaragupta
2. Samudragupta
3. Ghatotkachagupta
4. Skandagupta

**a. 3, 2, 1, 4** b. 1, 3, 2, 4 c. 1, 2, 3, 4
d. 4, 3, 2, 1 e. Answer not known

பின்வரும் பட்டியலில் குப்த மன்னர்களின் சிலரது பெயர்கள் கொடக்கப்பட்டுள்ளன அவர்களின் ஆட்சிக்கால அடிப்படையில் சரியான வரிசையைக் காண்க.
1. குமாரகுப்தர்
2. சமுத்திரகுப்தர்
3. கடோகச்சகுப்தர்
4. ஸ்கந்தகுப்தர்

**a. 3, 2, 1, 4** b. 1, 3, 2, 4 c. 1, 2, 3, 4
d. 4, 3, 2, 1 e. விடை தெரியவில்லை

14. India earned the titled called 'Ethnological Museum' because
**a. Multi-racial society** b. Multi-linguistic society
c. Multi-religious society d. Multi-cultural society
e. Answer not known

இந்தியா "இனவியல் பூங்கா" என்ற பெயரினை ஏன் பெற்றுள்ளது?
a. பன்முக இனச்சமூகம் b. பன்முக மொழிச்சமூகம்
c. பன்முக மதச்சமூகம் d. பன்முக கலாச்சாரச்சமூகம்
e. விடை தெரியவில்லை

15. Ala-ud-din Hasan Shah was succeeded by
**a. Muhammad Shah I** b. Ahmad Shah c. Firoz Shah

d. Jafar Khan Ala-ud-din II e. Answer not known

அலாவுதீன் ஹசன் ஷாவுக்கு பின் பதவிக்கு வந்தவர்

a. முதலாம் முகமது ஷா b. அகமது ஷா c. ∴பிரோஸ் ஷா

d. ஜாபர் கான் இரண்டாம் அலாவுதின் e. விடை தெரியவில்லை

16. Consider the statement about collective responsibility, choose the correct answer from the options given below :

Assertion [A]: Collective responsibility, in "Parliamentary Democracy" is to make whole body and persons holding Ministerial office collectively, rather than individually.

Reason [R]: Collective responsibility implies consensus building machine among ministers

a. [A] is true [R] is wrong
b. [A] is false [R] is true
**c. [A] and [R] are true, [R] is the correct explanation of [A]**
d. Both [A] and [R] are true, but [R] is not correct explanation of [A].
e. Answer not known

"கூட்டுப் பொறுப்புடைமை" பற்றிய கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக, அவற்றிலிருந்து சரியான விருப்ப விடையைத் தெரிவு செய்க.

துணிபு [A]: பாராளுமன்றக் குடியாட்சியின் கூட்டுப் பொறுப்பானது, எவ்வொரு தனிமனிதனையும் பொறுப்பாக்காது அமைச்சரவையில் உள்ள அனைவரையும் பொறுப்பாக்குகிறது.

காரணம் [R]: "கூட்டுப் பொறுப்பு" என்பது அமைச்சர்களிடையே ஒருமித்த கருத்தை உருவாக்கும் அமைப்பைக் குறிக்கிறது.

a. [A] என்பது உண்மை [R] என்பது தவறு
b. [A] என்பது தவறு [R] என்பது சரி
c. [A] மற்றும் [R] என்ற இரண்டும் சரி, [R] என்பது [A] க்குச் சரியான விளக்கமாகும்.
d. [A] மற்றும் [R] என்ற இரண்டும் உண்மை, ஆனால் [A] க்கு [R] சரியான விளக்கமாகாது.
e. விடை தெரியவில்லை

17. Match the following:

| Case law | Subject |
|---|---|
| A. Bandhu Mukti Morcha Vs Union of India | 1. The difference between Article 32 and Article 226 Explained |
| B. Salem Advocate Bar Association Vs Union of India | 2. Environmental Direction Issued |
| C. M.C. Metha Vs Union of India | 3. Speedy Trial applies to civil matters |
| D. Smt. Poonam Vs Sumit Tanwar | 4. Health environment included in Right to life |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. Answer not known

கீழ்கண்டவற்றைப் பொருத்துக

| வழக்காற்றுச் சட்டம் | பொருள் |
|---|---|
| A. பந்துகா முத்தி மோர்சா எதிர் இந்திய ஒன்றியம் | 1. சட்டஉறுப்பு 32 மற்றும் சட்டஉறுப்பு 226-க்கு இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குதல் |
| B. சேலம் வழக்கறிஞர்கள் சங்கம் எதிர் இந்திய ஒன்றியம் | 2. சுற்றுச்சூழல் வழிகாட்டுதல் உத்தரவு வழங்கப்பட்டது |

C. M.C. மேத்தா எதிர் இந்திய ஒன்றியம்

D. திருமதி. பூனம் எதிர் சுமித் தன்வார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

3. வழக்கை விரைந்து நடத்துவது சிவில் வழக்கிற்கும் பொருந்தும்

4. ஆரோக்கியமான சுற்றுச்சூழல் வாழ்வுரிமையுடன் இணைக்கப்பட்டது

18. Match correctly the Committees with the year of their set up

A. Balwantrai Mehta Committee — 1. 1977

B. Ashok Mehta Committee — 2. 1985

C. L.M. Singvi Committee — 3. 1986

D. G.V.K. Rao Committee — 4. 1957

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **4** | **1** | **3** | **2** |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. Answer not known

குழுக்கள் அமைக்கப்பட்ட ஆண்டோடு பொருத்துக.

A. பல்வந்த்ராய் மேத்தா குழு — 1. 1977

B. அசோக் மேத்தா குழு — 2. 1985

C. L.M. சிங்வி குழு — 3. 1986

D. G.V.K. ராவ் குழு — 4. 1957

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **4** | **1** | **3** | **2** |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

19. Which of the following statements are true about biogas plant?

1. Difficult to handle the effluent slurry
2. Gas forming methanogenic bacterias are sensitive
3. Easy to handle the gas collection
4. pH plays major role

a. 1, 3, 4 **b. 1, 2, 4** c. 2, 3, 4

d. 1, 2, 3 e. Answer not known

கீழ்கண்ட சொற்றொடர்களில் உயிர் வாயு ஆலையுடன் தொடர்புடையது

1. கழிவுக் குழம்பை கையாளுவது கடினம்
2. வாயு உருவாக்கும் மெதனோஜெனிக் பாக்டிரியா தீவிரமானது
3. வாயு சேகரிப்பு எளிதானது
4. pH முக்கிய பங்கு வகிக்கிறது

a. 1, 3, 4 **b. 1, 2, 4** c. 2, 3, 4

d. 1, 2, 3 e. விடை தெரியவில்லை

20. Which of the following is true about the Lok Sabha?

(i) Lok Sabha is commonly known as Lower House of the Indian Parliament.
(ii) Members of Lok Sabha are directly elected by the people.
(iii) 44th Amendment Act increased the number of Lok Sabha members to 545
a. (i) only b. (ii) only c. (iii) only
**d. (i) and (ii) only** e. Answer not known
மக்களவையைப் பற்றிக் கீழ்வருவனவற்றுள் எது/எவை சரியானது/சரியானவை?
(i) மக்களவை பொதுவாக இந்தியப் பாராளுமன்றத்தின் கீழவை என்று அழைக்கப்படுகிறது.
(ii) மக்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
(iii) 44வது சட்டதிருத்தத்தால் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 545 ஆக உயர்த்தியது.
a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (iii) மட்டும்
d. (i) மற்றும் (ii) ஆகியவை e. விடை தெரியவில்லை

21. Which of the following statements are true about the Cabinet?
(i) Cabinet system enforces responsibility of the executive to the Legislation.
(ii) Cabinet consists of the Prime Minister and his/her senior ministers with important portfolio
(iii) The head of the Cabinet is the Prime Minister
a. (i) only b. (i) and (ii) only c. (i) and (iii) only
**d. (i), (ii) and (iii)** e. Answer not known
கீழ்வருவனவற்றுள் எது/எவை கேபினட்டைக் குறித்து உண்மையானது/உண்மையானவை?
(i) சட்டமன்றத்திற்கு நிர்வாகிகளின் பொறுப்பினைக் கேபினட் அமைப்பு வலியுறுத்துகிறது.
(ii) கேபினட் என்பது பிரதம மந்திரி மற்றும் முக்கியமான துறைகளைக் கொண்ட மூத்த அமைச்சர்களைக் கொண்டதாகும்.
(iii) பிரதம மந்திரி கேபினட்டின் தலைவர் ஆவார்.
a. (i) மட்டும் b. (i) மற்றும் (ii) ஆகியன மட்டும்
c. (i) மற்றும் (iii) ஆகியன மட்டும் d. (i), (ii) மற்றும் (iii) ஆகியவை
e. விடை தெரியவில்லை

22. Which of the following are incorrectly paired?

| | | |
|---|---|---|
| 1. Ashok Mehta Committee | - | Social Audit |
| 2. Balwant Rai Mehta Committee | - | 3 tier system of PRI |
| 3. L.M. Singhvi Committee | - | District Collector to be the Chairman of Zila Parishad |
| 4. G.V.K. Rao Committee | - | Abolition of the post of District Development Commissioner |

a. 1 and 3 only b. 1 and 2 only c. 2 and 3 only
**d. 3 and 4 only** e. Answer not known
பின்வருவனவற்றுள் எவை தவறாகப் பொருத்தப்பட்டுள்ளன?

| | | |
|---|---|---|
| 1. அசோக் மேத்தா குழு | - | சமூகத் தணிக்கை |
| 2. பல்வந்த்ராய் மேத்தா குழு | - | 3 அடுக்கு பஞ்சாயத்து ராஜ் |
| 3. எல்.எம். சிங்வி குழு | - | மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவராக மாவட்ட ஆட்சியர் இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது |
| 4. ஜி.வி.கே. ராவ் குழு | - | மாவட்ட மேம்பாட்டு ஆணையர் என்ற பதவியை நீக்குதல் |

a. 1 மற்றும் 3 ஆகியன மட்டும் b. 1 மற்றும் 2 ஆகியன மட்டும்
c. 2 மற்றும் 3 ஆகியன மட்டும் d. 3 மற்றும் 4 ஆகியன மட்டும்
e. விடை தெரியவில்லை

23. “Ralegan Siddhi” a famous place in India is well known for elimination of the evil of

a. Poverty in Rural Area
**b. Corruption in Administration**
c. Criminalisation of Politics
d. Human Rights Violations
e. Answer not known

இந்தியாவில் “ரலேகான் சித்தி” என்ற இடம் இந்தக் கொடுமையை ஒழிப்பதற்காகப் புகழ்பெற்றது.

a. கிராமப் புறங்களில் வறுமை ஒழிப்பு
b. நிர்வாகத்தில் இருக்கும் ஊழல்
c. அரசியல் கிரிமினல்கள் மயமாவது
d. மனித உரிமை மீறல்கள்
e. விடை தெரியவில்லை

24. In India, 59 per cent of the land mass is susceptible to seismic hazard; 5 percent of the total geographical area is prone to floods; 8 percent of the total landmass is prone to cyclones; what percent of the total cultivable area is vulnerable to drought?

a. 72% **b. 68%** c. 70% d. 65% e. Answer not known

இந்தியாவில், 59 சதவீத நிலப்பரப்பு நில அதிர்வு அபாயத்திற்கு ஆளாகிறது; மொத்தப் புவியியல் பகுதியில் 5 சதவிகிதம் வெள்ளத்தால் பாதிக்கப்படும்; மொத்த நிலப்பரப்பில் 8 சதவிகிதம் சூறாவளிக்கு ஆளாகிறது. மோத்தச் சாகுபடி பரப்பில் எத்தனை சதவீதம் வறட்சியால் பாதிக்கப்படும்?

a. 72% **b. 68%** c. 70% d. 65% e. விடை தெரியவில்லை

25. The term ‘Operation Flood’ is related to

a. Green Revolution
**b. White Revolution**
c. Blue Revolution
d. Poly House Revolution
e. Answer not known

ஆப்பரேஷன் ஃப்ளட் எனும் வார்த்தை, இதனுடன் தொடர்புடையது

a. பசுமை புரட்சி
b. வெள்ளை புரட்சி
c. நீல புரட்சி
d. பாலி வீடு புரட்சி
e. விடை தெரியவில்லை

26. Cotton cultivation predominates in Regur Region of North West India. The Narmada, Tapi, Purna and Sabarmati River Valley region are basically heartland of cotton cultivation. It always associated with one food grain cultivation refereably jowar, Bajra and oil seeds.

Which one of the following is best implied in the passage?

**a. Black Soil is favour for cotton cultivation**
b. Cotton is the commercial crop
c. Cotton cultivation mostly in North West India
d. Cotton always associated with food grain
e. Answer not known

வட மேற்கு இந்தியாவின் ரெகுர் பகுதியில் பருத்தி சாகுபடி ஆதிக்கம் செலுத்துகிறது. நர்மதா, தாபி, பூர்ணா, சபர்மதி ஆற்றுப் பள்ளத்தாக்குகள் பருத்தி சாகுபடியின் மையப் பகுதிகளாகும். இது பெரும்பாலும் ஏதேனும் ஒரு உணவுப் பயிருக்கு இணையாகச் சாகுபடியில் முன்னுரிமையைப் பெறுகிறது. அவை முறையே ஜோவர், பஜ்ரா மற்றும் எண்ணெய் வித்துக்கள்.
பின்வருவனவற்றில் எது சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

a. கருப்பு மண் பருத்தி விளைச்சலுக்கு ஏற்றது
b. பருத்தி ஒரு வாணிபப்பயிர்
c. பருத்தி பெரும்பாலும் வடமேற்கு இந்தியாவில் பயிரிடப்படுகிறது
d. பருத்தி பெரும்பாலும் ஏதேனும் ஒரு உணவுப் பயிரிடுதலுக்கு இணையானது
e. விடை தெரியவில்லை

27. Which river is called the sorrow of Bihar?

**a. Kosi**
b. Sharavati
c. Narmada
d. Tapti
e. Answer not known

பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு எது?

a. கோசி b. சாராவதி c. நர்மதா
d. தபதி e. விடை தெரியவில்லை

28. Clear sky, pleasant weather, low temperature and humidity, high range of temperature, cool and slow northern winds are the chief characteristics of ______ season.
a. South West monsoon b. North East monsoon **c. Winter season**
d. Summer season e. Answer not known
தெளிவான வானம், இனிமையான வானிலை, குறைந்த வெப்பம் மற்றும் ஈரப்பதநிலை, அதிக வெப்பநிலை வீச்சு, குளிர்ந்த மற்றும் மெதுவான வடக்கு காற்றுகள், இவையெல்லாம் ___ பருவத்தின் முக்கியமான குணங்களாகும்.
a. தென் மேற்கு பருவமழை b. வட கிழக்கு பருவமழை c. குளிர்காலம்
d. வேனிற்காலம் e. விடை தெரியவில்லை

29. Identify the Constitutional Amendment Act that reduced the age of voting from 21 years to 18 years?
a. 60th Amendment Act **b. 61st Amendment Act** c. 62nd Amendment Act
d. 63rd Amendment Act e. Answer not known
வாக்களிக்கும் வயதை 21 லிருந்து 18 ஆக குறைத்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அடையாளம் காண்க.
a. 60வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
b. 61வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
c. 62வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
d. 63வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்
e. விடை தெரியவில்லை

30. Autobiography of "Fall of Sparrow" was written by
a. Vineetha Menon b. Balachandran c. Laxmikanth
**d. Salim Ali** e. Answer not known
"சிட்டுக்குருவியின் வீழ்ச்சி" என்ற சுயசரிதையை எழுதியவர்
a. வினிதா மேனன் b. பாலசந்திரன் c. லஷ்மிகாந்த்
d. சலீம் அலி e. விடை தெரியவில்லை

31. National Anti Doping Agency (NADA) was setup in the year
a. 2007 **b. 2009** c. 2011 d. 2013 e. Answer not known
தேசிய ஊக்கமருந்து (NADA) எதிர்ப்பு நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டு
a. 2007 **b. 2009** c. 2011 d. 2013 e. விடை தெரியவில்லை

32. Goa celebrated its 60th Liberation Day on
a. December 2018 b. December 2019 **c. December 2020**
d. December 2022 e. Answer not known
கோவா தனது '60-வது விடுதலை நாளை' எப்போது கொண்டாடியது?
a. டிசம்பர் 2018 b. டிசம்பர் 2019 c. டிசம்பர் 2020
d. டிசம்பர் 2022 e. விடை தெரியவில்லை

33. ____ became the 23rd state of the Indian Union in February 1987.
**a. Mizoram** b. Odisha c. Punjab
d. Uttarkhand e. Answer not known
_____ பகுதி பிபரவரி 1987ஆம் ஆண்டு இந்திய யூனியன் 23-வது மாநிலமாக்கப்பட்டது.
a. மிசோரம் b. ஒடிசா c. பஞ்சாப்
d. உத்ராகாண்ட் e. விடை தெரியவில்லை

34. In which year was the word "Corona virus" used in the scientific journal "Nature"?
a. 1978 b. 1986 **c. 1968** d. 1966 e. Answer not known
கரோனா வைரஸ் என்ற சொல் முதன் முதலில் "நேச்சர்" அறிவியல் ஆய்விதழில் வெளியிட்ட ஆண்டு எது?
a. 1978 b. 1986 **c. 1968** d. 1966 e. விடை தெரியவில்லை

35. India launched its 41st Scientific Expedition to Antarctica in the year
a. 2019 b. 2020 **c. 2021** d. 2022 e. Answer not known
அண்டார்டிக்காவிற்கான 41வது அறிவியல் சார்ந்த பயணத்தை இந்தியா _____ ல் துவக்கியது.
a. 2019 b. 2020 **c. 2021** d. 2022 e. விடை தெரியவில்லை

36. Which gas is maximum available in Sun?
**a. Hydrogen** b. Oxygen c. Helium
d. Nitrogen e. Answer not known
சூரியனில் எந்த வாயு அதிகமாக உள்ளது?
a. ஹைட்ரஜன் b. ஆக்சிஜன் c. ஹீலியம்
d. நைட்ரஜன் e. விடை தெரியவில்லை

37. In meiosis, recombination occurs in
a. Metaphase I **b. Prophase I** c. Metaphase II
d. Prophase II e. Answer not known
மியாசிஸ் பகுப்பில் மறுசேர்க்கை நடைபெறும் நிலை
a. மையநிலை I b. முதல் நிலை I c. மைய நிலை II
d. முதல் நிலை II e. விடை தெரியவில்லை

38. Identify the characteristic which is not associated with scientific attitude?
a. Critical observation b. open mindedness c. free from superstition
**d. biased** e. Answer not known
விஞ்ஞான அணுகுமுறையுடன் தொடர்புபடுத்தப்படாத பண்பை அடையாளம் காண்க
a. விமர்சன உற்றுநோக்கல் b. திறந்த மனப்பான்மை
c. மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டிருத்தல் d. பக்கச்சார்பான
e. விடை தெரியவில்லை

39. Duplication of mitochondrial DNA takes place during
a. $G_1$ – phase b. S – phase **c. $G_2$ – phase**
d. $G_0$ – state e. Answer not known
எந்த நிலையில் மைட்டோகாண்டிரியாவின் னுயே இரட்டிக்கின்றது
a. $G_1$ – நிலை b. S – நிலை **c. $G_2$ –** நிலை
d. $G_0$ – நிலை e. விடை தெரியவில்லை

40. Individuals with ____ blood group is called universal Donor.
a. AB **b. O** c. A d. B e. Answer not known
_____ என்ற குருதி பிரிவினைச் சார்ந்தவர் உலக குருதி கொடையாளர் என்று அழைக்கப்படுவர்.
a. AB **b. O** c. A d. B e. விடை தெரியவில்லை

41. National Fossil Wood Park in Tamilnadu is located in
**a. Villupuram** b. Madurai c. Tirunelveli
d. Tuticorin e. Answer not known
தமிழ்நாட்டில் தேசிய தொல்லுயிர்படிம மர பூங்கா இங்கு அமைந்துள்ளது.
a. விழுப்புரம் b. மதுரை c. திருநெல்வேலி

d. தூத்துக்குடி e. விடை தெரியவில்லை

42. The element needed to increase the straw of cereal crops is
a. Nitrogen **b. Phosphorous** c. Calcium
d. Iron e. Answer not known
தானியப் பயிர்களில் வைக்கோல் இழையினை அதிகப்படுத்த தேவைப்படும் தனிமம் _____ ஆகும்.
a. நைட்ரஜன் b. பாஸ்பரஸ் c. கால்சியம்
d. இரும்பு e. விடை தெரியவில்லை

43. Which of the following are the primary colours in a Colour TV system?
a. Blue, Green, Yellow b. Yellow, Green, Violet
c. Red, Yellow, Violet **d. Red, Green, Yellow**
e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள், வண்ணத் தொலைக்காட்சி அமைப்பின், முதன்மை நிறங்கள் யாவை?
ய. நீலம், பச்சை, மஞ்சள் டி. மஞ்சள், பச்சை, ஊதா
உ. சிவப்பு, மஞ்சள், ஊதா ன. சிவப்பு, பச்சை, மஞ்சள்
e. விடை தெரியவில்லை

44. Assertion [A]: Macaulay argued for Western education in the English language.
Reason [R]: Macaulay intension was to educate the people of India not in Sanskrit or Persian language.
a. [A] is correct but [R] does not explain [A]
b. [A] is correct and [R] is incorrect
**c. [A] is correct and [R] is a correct explanation of [A]**
d. Both [A] and [R] are wrong
e. Answer not known
கூற்று [A]: மெக்காலே தனது குறிப்புகளில் ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாக வாதிட்டார்.
காரணம் [R]: மெக்காலே, இந்தியர்களுக்கு சமஸ்கிருதத்திலும், பாரசீக மொழியிலும் கல்வி புகட்ட கூடாது என்ற எண்ணம் கொண்டிருந்தார்.
a. கூற்று சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
b. கூற்று சரி; காரணம் தவறு
c. கூற்று சரி; காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
d. கூற்று காரணம் இரண்டும் தவறு
e. விடை தெரியவில்லை

45. Whose writings inspired Gandhi, for the Civil Disobedience Movement in South Africa.
**a. Henry David Thoreau** b. David Ricordo c. Leo Tolstoy
d. Bertrand Russell e. Answer not known
தென் ஆப்பிரிக்காவில் காந்தியின் சட்டமறுப்பு இயக்கத்துக்கு யாருடைய படைப்பு உத்வேகத்தை கொடுத்தது?
a. ஹென்றி டேவிட் தாரோ b. டேவிட் ரிக்கார்டோ c. லியோ டால்ஸ்டாய்
d. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் e. விடை தெரியவில்லை

46. ____ accompanied Subash Chandra Bose during his secret journey in a German U-boat submarine and reached South of Madagascar.
a. Maulvi Ziauddin b. Bhagat Ram c. Mohan Singh
**d. Abid Hussain** e. Answer not known
ஜெர்மானிய நாட்டு U-வகை நீர்மூழ்கி கப்பலில் தெற்கு மடகாஸ்கருக்குச் சென்றடைந்த இரகசிய கடற்பயணத்தில் சுபாஸ் சந்திர போஸ் உடன் பயணித்தவர்

a. மௌலவி ஜியாயுத்தீன் b. பகத் ராம் c. மோகன் சிங்
d. ஆபித் ஹுசைன் e. விடை தெரியவில்லை

47. Which among the following journal published the interview of Gandhiji on the popular historical event "Gandhi Jinnah Talks" that made a serious impact on society?
a. **News Chronicle of London on July 4, 1944**
b. Indian Mirror on June 30, 1944
c. Bengal Gazatte on July 14, 1943
d. Commonweal on June 12, 1942
e. Answer not known

சமூகத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திய வரலாற்று நிகழ்வான "காந்தி ஜின்னா பேச்சுவார்த்தை" பற்றிய காந்தியின் நேர்காணலை பின்வரும் எந்த பத்திரிக்கை வெளியிட்டது?
a. நியூஸ் குரோனிக்கல், லண்டன் ஜூலை 4, 1944
b. இந்தியன் மிர்ரர், ஜுன் 30, 1944
c. பெங்கால் கெசட், ஜூலை 14, 1943
d. காமன்வீல், ஜுன் 12, 1942
e. விடை தெரியவில்லை

48. "I do not like what some people say, that we are Indians first and Hindus afterwards or Muslims afterwards. I am not satisfied with that… I want all people to be Indians first, Indians last and nothingelse but Indians" Who said this?
a. Mahatma Gandhi b. Maulana Abul Kalam Azad
**c. B.R. Ambedkar** d. Jawaharlal Nehru
e. Answer not known

"முதலில் நாம் இந்தியர்கள், அதற்குப் பிறகு தான் ஹிந்துக்கள் அல்லது அதற்குப் பிறகுதான் முகமதியர்கள் என்று ஒரு சிலர் கூறுவது என்னால் ஏற்க முடியவில்லை. எனக்கு அதில் திருப்தியுமில்லை. எல்லோருமே முதலில் இந்தியர்கள் மற்றும் இறுதிவரை இந்தியர்களே, இந்தியர்களைத் தவிர வேறொன்றுமில்லை என்றிருக்க நான் விரும்புகிறேன்" என்று கூறியவர் யார்?
a. மகாத்மா காந்தி b. மௌலானா அபுல் கலாம் ஆசாத்
c. பி.ஆர். அம்பேத்கர் d. ஜவஹர்லால் நேரு
e. விடை தெரியவில்லை

49. From which of the following constitution, the source of "Directive principles of state policy" of constitution of India, was derived
**a. Ireland** b. Iceland c. Netherland
d. Poland e. Answer not known

கீழ்வரும் எந்த நாட்டு அரசியல் அமைப்பிலிருந்து இந்திய அரசியல் அமைப்பில் உள்ள "அரசு நெறிமுறை கோட்பாடு" என்ற ஆதாரம் எடுக்கப்பட்டது
a. அயர்லாந்து b. ஐஸ்லாந்து c. நெதர்லாந்து
d. போலாந்து e. விடை தெரியவில்லை

50. (i) When the general elections were held in February 1937, Jawaharlal Nehru made a whirlwind tour of the country and carried everywhere the message of the Congress.
(ii) The success of the Congress in the elections was very much due to the efforts of Gandhiji.
Which of the above statement/s is/are true?
**a. (i) only** b. (ii) only c. (i) and (ii) only
d. None of the above e. Answer not known

(i) பிப்ரவரி 1937 இல் பொதுத் தேர்தல் நடந்தபோது, ஜவஹர்லால் நேரு நாடு முழுவதும் ஒரு சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து காங்கிரஸின் செய்தியை எங்கும் கொண்டு சென்றார்.
(ii) இருப்பினும் தேர்தலில் காங்கிரஸின் வெற்றிக்கு காந்திஜியின் முயற்சியே காரணம்
மேலே காணப்படும் கூற்றுகளில் சரியானது/வை எது/எவை?
a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (i) மற்றும் (ii) மட்டும்
d. மேற்கண்ட எவையுமில்லை e. விடை தெரியவில்லை

51. Which of the following is incorrectly paired?
1. GSDP - Gross State Domestic Product
2. GDP - Gross Domestic Price
3. SIPCOT - State Industrial Promotion Corporation of Tamil Nadu
4. SEZ - Special Employment Zone
a. 1 and 3 are correct **b. 2 and 4 are correct** c. 2 and 3 are correct
d. 3 and 4 are correct e. Answer not known
பின்வருவனவற்றுள் தவறாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்ந்தெடு.
1. GSDP – மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி
2. GDP – மொத்த உள்நாட்டு விலை
3. SIPCOT – தமிழ் நாடு மாநில தொழில் வளர்ச்சிக் கழகம்
4. SEZ – சிறப்பு வேலைவாய்ப்பு மண்டலம்
a. 1 மற்றும் 3 சரி b. 2 மற்றும் 4 சரி c. 2 மற்றும் 3 சரி
d. 3 மற்றும் 4 சரி e. விடை தெரியவில்லை

52. Match the following.
A. Thiru. V. Kalyanasundaram 1. National School
B. E.V.R. Periyar 2. Saiva Siddhanta School
C. V.V. Subramaniyam Aiyar 3. Kudi Arasu
D. Sami Venkatachalam 4. Navasakthi

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| **d.** | **4** | **3** | **1** | **2** |

e. Answer not known
பின்வருவனவற்றைப் பொருத்துக.
A. திரு. வி. கல்யாணசுந்தரம் 1. தேசியப் பள்ளி
B. ஈ.வெ.ரா. பெரியார் 2. சைவ சித்தாந்தப் பள்ளி
C. வி.வி. சுப்ரமணிய ஐயர் 3. குடி அரசு
D. சாமி வெங்கடாசலம் 4. நவசக்தி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| **d.** | **4** | **3** | **1** | **2** |

e. விடை தெரியவில்லை

53. Match the following
A. V.O. Chidambaram 1. Alagammai Asiriya Virutham
B. Bharathi 2. Sangoli
C. Namakkal Kavignar Ramalingam 3. Swadeshi Navigation Company

D. Kavimani Desiga Vinayagam 4. Bala Bharat

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| **b.** | **3** | **4** | **2** | **1** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. Answer not known

கீழ்க்கண்டவற்றை பொருத்துக:

A. வ.உ. சிதம்பரம் — 1. அழகம்மை ஆசிரிய விருத்தம்

B. பாரதி — 2. சங்கொலி

C. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் — 3. சுதேசி கப்பல் கம்பெனி

D. கவிமணி தேசிக விநாயகம் — 4. பால பாரத்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| **b.** | **3** | **4** | **2** | **1** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

54. From 1757 to 1833 India witnessed _____
1. Different regions in India began to draw closer.
2. Old hierarchy of Social groups began to disintegrate
3. The caste system tended to relax
4. Village economy lost its character of self-sufficiency and isolation

a. 1 only b. 1 and 3 only c. 2 and 4 only
**d. All the above** e. Answer not known

கி.பி. 1757 முதல் 1833 வரை இந்தியாவில் எதனை காணமுடிந்தது.
1. இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்கள் ஒன்றிணைந்தன.
2. சமூக இனங்களின் பழைய/பழமையான மரபுகள் அழிந்து போயின
3. சாதிய முறை தளர்ந்தது
4. கிராமிய பொருளாதாரம் அதன் தற்சார்பு மற்றும் தனித்திருக்கும் தன்மையை இழந்தது.

a. 1 மட்டும் b. 1 மற்றும் 3 மட்டும் c. 2 மற்றும் 4 மட்டும்
d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

55. Which songs of a particular Tinai are not found in Purananooru?

a. Padaan Tinai b. Kanchi Tinai c. Vaagaith Tinai
**d. Uzhignai Tinai** e. Answer not known

எத்திணைக்குரிய பாடல்கள் புறநானூற்றில் இல்லை?

a. பாடாண் திணை b. காஞ்சித் திணை c. வாகைத் திணை
d. உழிஞைத் திணை e. விடை தெரியவில்லை

56. Which archeological excavation illustrates the extent and richness of the maritime trade between Tamil Nadu and Rome?

a. Keezhadi **b. Arikkamedu** c. Mauriyakudi
d. Sengalpattu e. Answer not known

எந்தப் புதைபொருளாராய்ச்சி, தமிழகத்திற்கும் ரோமபுரிக்கும் இடையிட்ட கடல் வாணிகத்தின் விரிவையும் வளத்தையும் பெரிதும் விளக்கிக் காட்டுகின்றது?

a. கீழடி b. அரிக்கமேடு c. மௌரியக்குடி
d. செங்கல்பட்டு e. விடை தெரியவில்லை

57. Match the following.

| | | | | |
|---|---|---|---|---|
| A. Ninaivuppathai | | | | 1. Aathavan |
| B. Kakitha Malargal | | | | 2. Vannanilavan |
| C. Thandira Bhoomi | | | | 3. Nagulan |
| D. Kadalpurathil | | | | 4. Indira Parthasarathy |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 1 | 4 | 3 | 2 |
| **c.** | **3** | **1** | **4** | **2** |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. Answer not known

கீழ்கண்டவற்றை பொருத்துக :

A. நினைவுப்பாதை — 1. ஆதவன்
B. காகித மலர்கள் — 2. வண்ணநிலவன்
C. தந்திர பூமி — 3. நகுலன்
D. கடல்புரத்தில் — 4. இந்திரா பார்த்தசாரதி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 1 | 4 | 3 | 2 |
| **c.** | **3** | **1** | **4** | **2** |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

58. What does the following Kural depict?
"Kudambai thaniththozhiya Pul paranthatrae"

a. Happiness is transient b. Youth is transient c. Wealth is transient
**d. Life is transient** e. Answer not known

'குடம்பை தனித்தொழிய புள் பற்ந்தற்றே' என்னும் குறளில் வரும் காட்சி புலப்படுத்துவது எது?

a. மகிழ்ச்சி நிலையில்லாதது b. இளமை நிலையில்லாதது
c. செல்வம் நிலையில்லாதது d. வாழ்க்கை நிலையில்லாதது
e. விடை தெரியவில்லை

59. Pick out the correct pair from the following.

1. Anbalippu - Ku. Azhagirisamy
2. Kadavulum Kandasamy Pillaiyum - Pudhumai Pithan
3. Yugasanthi - Jeyakanthan
4. Thirudan Magan Thirudan - Kalki

a. 1, 3, 4 alone is correct b. 3 and 4 alone is correct
c. None of the above is correct **d. 1, 2, 3, 4 all are correct**
e. Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான இணையைத் தேர்வு செய்க.

1. அன்பளிப்பு - கு. அழகிரிசாமி
2. கடவுளும் கந்தசாமி பிள்ளையும் - புதுமைப்பித்தன்
3. யுகசந்தி - ஜெயகாந்தன்
4. திருடன் மகன் திருடன் - கல்கி

a. 1, 3, 4, மட்டும் சரி b. 3, 4 மட்டும் சரி c. எதுவும் சரியில்லை
d. 1, 2, 3, 4 அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

60. Rani Velunachiyar lived under the protection of Gopala Nayakkar at ____ near Dindugal.

a. Kannivadi b. Thandikkudi **c. Virupachi**
d. Aayakkudi e. Answer not known

இராணி வேலுநாச்சியார் திண்டுக்கல் அருகே கோபால நாயக்கரின் பாதுகாப்பில் _____ என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார்.

a. கன்னிவாடி b. தாண்டிக்குடி c. விருப்பாட்சி
d. ஆயக்குடி e. விடை தெரியவில்லை

61. Who lived in the name of "Dharmasenar"?

a. Thirugnana Sambanthar **b. Thirunavukkarasar**
c. Sundarar d. Manickavasagar
e. Answer not known

'தருமசேனர்' என்ற பெயருடன் வாழ்ந்து வந்தவர் யார்?

a. திருஞானசம்பந்தர் b. திருநாவுக்கரசர்
c. சுந்தரர் d. மாணிக்கவாசகர்
e. விடை தெரியவில்லை

62. From which book is the line "Kutram paarkin Sutram Illai" is taken?

a. Aathi Soodi b. Thirukkural c. Proverb
**d. Kondraiventhan** e. Answer not known

"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்ற அடி இடம் பெற்றுள்ள நூல் எது?

a. ஆத்தி சூடி b. திருக்குறள் c. பழமொழி
d. கொன்றைவேந்தன் e. விடை தெரியவில்லை

63. Which of the following Statements is/are not correct about Akbar?

A. Akbar was influenced by his mother
B. Akbar took Roopmathi from Baz Bahadur
C. Bairam khan was killed by Akbar
D. Akbar attacked Chitoor to get the treasure

a. (A) and (B) are correct; (C) and (D) are wrong
b. (B) and (D) are correct; (A) and (C) are wrong
c. (B) and (C) are wrong; (A) and (D) are correct
**d. (A) is correct; (B), (C) and (D) are wrong**
e. Answer not known

கீழே குறிப்பிடப்பட்டவற்றில் அக்பரை பற்றிய தவறான கருத்து எது?

A. அக்பர் அவரது தாயாரால் கவரப்பட்டார்
B. அக்பர் ரூப்மதியை பாஸ்பகதூரிடமிருந்து கவர்ந்தார்
C. பைராம்கானை அக்பர் கொன்றார்
D. அக்பர் சித்தூரை கொள்ளையடிப்பதற்காக படையெடுத்தார்

a. (A) மற்றும் (B) சரி; (C) மற்றும் (D) தவறு
b. (B) மற்றும் (D) சரி; (A) மற்றும் (C) தவறு
c. (B) மற்றும் (C) தவறு; (A) மற்றும் (D) சரி
d. (A) சரி; (B), (C) மற்றும் (D) தவறு
e. விடை தெரியவில்லை

64. Name the king, who introduced the Asvamedha types of Gold Coins bearing the figures of Lakshmi and Ganga.

**a. Samudra Gupta** b. Chandra Gupta II c. Kumara Gupta
d. Skanda Gupta e. Answer not known

யாருடைய ஆட்சிக் காலத்தில் அசுவமேதா வகை தங்க நாணயங்களில் லட்சுமி மற்றும் கங்கையின் உருவங்கள் பொறிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

a. சமுத்திர குப்தா b. சந்திர குப்தா II c. குமார குப்தா
d. ஸ்கந்த குப்தா e. விடை தெரியவில்லை

65. Assertion [A]: The Small Scale Industry of India was ruined due to the attitude of the Britishers.
Reason [R]: British Government declared the Policy of free trade in the year 1833.
a. [A] is true but [R] is false
**b. Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]**
c. [A] is false, but [R] is true
d. Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]
e. Answer not known
கூற்று [A]: பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அணுகுமுறையால் இந்திய சிறுதொழில் அழிந்தது.
காரணம் [R]: 1833ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் தடையில்லா வாணிபக் கொள்கையை அறிவித்தது.
a. [A] சரி ஆனால் [R] தவறு
b. [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] -விற்கு சரியான விளக்கமாகும்.
c. [A] தவறு ஆனால் [R] சரி
d. [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] விற்கு சரியான விளக்கமல்ல
e. விடை தெரியவில்லை

66. "Work for food" scheme implemented by Central Government in the year 1972. This programme yearly provides.
I. 10,1000 tonne Wheat
II. 60,000 tonne Rice
III. 10 lakhs Agricultural instrument
IV. Rs. 10 crore subsidy for marginal labour
**a. I, II** b. II, III c. III, IV d. IV, I e. Answer not known
வேலைக்கு உணவுத் திட்டம் மத்திய அரசால் 1972-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டிற்கு கிடைப்பது.
I. 10,000 டன் கோதுமையும்
II. 60,000 டன் அரிசியும்
III. 10 இலட்சம் விவசாயக் கருவிகளும்
IV. 10 கோடி விளிம்பு நிலை தொழிலாளருக்கு மானியம்
**a. I, II** b. II, III c. III, IV d. IV, I e. விடை தெரியவில்லை

67. 'Empowerment of Women' policy focus/s on
(i) Poverty Eradication
(ii) Micro Credit
(iii) Women and Economic development
a. (i) only b. (ii) only c. (iii) only
**d. (i), (ii) and (iii)** e. Answer not known
'பெண்களுக்கு அதிகாரமளித்தல்' கொள்கை கீழ்க்கண்டவற்றுள் கவனம் செலுத்துகிறது
(i) வறுமை ஒழிப்பு
(ii) சிறிய அளவில் கடன் வழங்குதல்
(iii) பெண்கள் மற்றும் பொருளாதார மேம்பாடு
a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (iii) மட்டும்
d. (i), (ii) மற்றும் (iii) e. விடை தெரியவில்லை

68. (i) The study of the SNDP and the Yadava movements illustrate the emergence of large ethnic blocs on the basis of ideology through political Mobilization
(ii) These movements had well-defined ideology on the basis of identity.
Which of the statements is/are true?
a. (i) only b. (ii) only **c. (i) and (ii)**
d. None of the above e. Answer not known

(i) SNDP மற்றும் யாதவ இயக்கங்களின் ஆய்வு, அரசியல் அணி திரட்டல் மூலமான கருத்தியலின் அடிப்படையில் பெரிய இனக் குழுக்கள் தோன்றியதை விளக்குகிறது.
(ii) இந்த இயக்கங்கள் அடையாளத்தின் அடிப்படையில் சித்தாந்தத்தை நன்கு வரையறுத்திருந்தன.
இக்கூற்றுகளில் எது உண்மை?
a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (i) மற்றும் (ii)
d. மேற்கண்ட எதுவும் இல்லை e. விடை தெரியவில்லை

69. Assertion [A]: Non-Brahmins with minimum educational qualification should be provided with employment opportunity and be appointed in all government services.
Reason [R]: Communal Representation Decree was passed in the year 1921.
a. [A] is True [R] is False
**b. Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A].**
c. [A] is False, [R] is True
d. Both [A] and [R] are True, but [R] is not the correct explanation of [A].
e. Answer not known

கூற்று [A]: குறைந்தபட்ச கல்வித தகுதியுடைய பிராமணர் அல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் மற்றும் அனைத்தும் அரசுப் பணிகளிலும் நியமிக்கப்பட வேண்டும்.
காரணம் [R]: வகுப்புவாத பிரதிநிதித்துவ ஆணை 1921இல் நிறைவேற்றப்பட்டது.
a. [A] சரி ஆனால் [R] தவறு
b. [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R] என்பது [A]-விற்கு சரியான விளக்கம்
c. [A] தவறு ஆனால் [R] சரி
d. [A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [R] என்பது [A]-விற்கு சரியான விளக்கம் அல்ல
e. விடை தெரியவில்லை

70. Assertion [A]: The prime objective of the government is the overall Development of the tribal community
Reason [R]: Proper and effective implementation of schemes is of paramount importance.
**a. Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A].**
b. Both [A] and [R] are True, but [R] is not the correct explanation of [A].
c. [A] is True [R] is False
d. [A] is False, [R] is True
e. Answer not known

கூற்று ஐயுஸ: பழங்குடியினரின் ஒட்டுமொத்த வளர்ச்சியே அரசின் முதன்மையான நோக்கம் ஆகும்.
காரணம் ஐசுஸ: திட்டங்களை முறையாகவும், திறமையாகவும் செயற்படுத்துவது மிக முக்கியமானது.
a. [A] மற்றும் [R] சரி; மேலும் [R] [A] -க்கான சரியான விளக்கம்
b. [A] மற்றும் [R] சரி; மேலும் [R] [A]-வுக்கான சரியான விளக்கம் அல்ல
c. [A] சரி; ஆனால் [R] தவறு
d. [A] தவறு; ஆனால் [R] சரி
e. விடை தெரியவில்லை

71. Choose the wrong matches.

| | | |
|---|---|---|
| 1. Tamilnadu Tourism Development Corporation | - | 1971 |
| 2. Make in India | - | 1920 |
| 3. Mid-day meal scheme | - | 2014 |
| 4. Old age pension | - | 1983 |

a. Both 1 and 2 b. only 3 c. Both 3 and 4
**d. Both 2 and 3** e. Answer not known

கீழ்கண்டவற்றுள் சரியாகப் பொருத்தப்படாதவற்றைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| 1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | - | 1971 |
| 2. மேக் இன் இந்தியா திட்டம் | - | 1920 |
| 3. மதிய உணவுத் திட்டம் | - | 2014 |
| 4. முதியோர் ஓய்வூதியத் திட்டம் | - | 1983 |

a. 1 மற்றும் 2 b. 3 மட்டும் c. 3 மற்றும் 4
d. 2 மற்றும் 3 e. விடை தெரியவில்லை

72. Which of the following is NOT the reason for the provision of reservation for SCs and STs?
a. Right to equality b. Right to dignity **c. Right to liberty**
d. Right to livelihood e. Answer not known

பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கு பின்வருவனவற்றுள் எது காரணம் அல்ல?
a. சமத்துவத்திற்கான உரிமை b. மாண்பிற்கான உரிமை
c. சுதந்திரத்திற்கான உரிமை d. வாழ்வாதாரத்திற்கான உரிமை
e. விடை தெரியவில்லை

73. Which of the following is/are true with reference to the impact of Mrs. Annie Besant's efforts?
(i) She founded the central Hindu College at Benares.
(ii) Her paper 'New India spread the theosophical ideas.
**a. (i) only** b. (ii) only c. Both (i) and (ii)
d. None of the above e. Answer not known

கீழ்க்காண்பவற்றுள் எது/எவை அன்னி பெசன்ட் அம்மையாரின் முயற்சியில் உருவானது/உருவானவை?
(i) அவர் பனாரஸில் மத்திய இந்துக் கல்லூரியை நிறுவினார்.
(ii) அவருடைய 'நியூ இந்தியா' எனும் செய்தித்தாள் பிரம்மஞானசபைக் கொள்கைகளைப் பரப்பியது.
a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (i) மற்றும் (ii) இரண்டும்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

74. In 2017 ____ district was a top rank in Gender Inequality Index of Tamil nadu.
a. Chennai b. Namakkal **c. Nilgiris**
d. Vellore e. Answer not known

2017ஆம் ஆண்டு ____ மாவட்டம் பாலின சமத்துவமின்மை குறியீட்டில் தமிழ்நாட்டில் முதலிடத்தில் இருந்தது.
a. சென்னை b. நாமக்கல் c. நீலகிரி
d. வேலூர் e. விடை தெரியவில்லை

75. An amount of Rs. 1,000/- will be deposited in the bank accounts of girl students enrolled and studied in government school announced on
a. March 16, 2022 b. March 17, 2022 **c. March 18, 2022**

d. March 19, 2022 e. Answer not known

அரசுப் பள்ளியில் சேர்ந்து படிக்கும் மாணவிகளின் வங்கிக் கணக்கில் ரூ.1000 டெபாசிட் செய்யப்படும் என அறிவிக்கப்பட்ட நாள்

a. மார்ச் 16, 2022 b. மார்ச் 17, 2022 c. மார்ச் 18, 2022

d. மார்ச் 19, 2022 e. விடை தெரியவில்லை

76. A and B can do a piece of work in 12 days, while B and C can do it in 15 days whereas A and C can do it in 20 days. How long will B take to do the same work.

a. 10 days b. 15 days c. 30 days

**d. 20 days** e. Answer not known

A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை 12 நாட்களிலும் B மற்றும் C ஆகியோர் அதை 15 நாட்களிலும் A மற்றும் C ஆகியோர் அதை 20 நாட்களிலும் முடிப்பர். B என்பவர் அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

a. 10 நாட்கள் b. 15 நாட்கள் c. 30 நாட்கள்

d. 20 நாட்கள் e. விடை தெரியவில்லை

77. The simple interest on a sum of money is $\frac{4}{9}$ of the principal and the number of years is equal to the rate percent per annum then find the rate per annum.

a. $6\frac{1}{3}\%$ **b.** $6\frac{2}{3}\%$ c. $5\frac{1}{3}\%$ d. $5\frac{2}{3}\%$ e. Answer not known

ஒரு தொகையின் தனிவட்டியானது அசலின் $\frac{4}{9}$ ஆகவும் மற்றும் அதன் காலமும் வட்டி வீதமும் சமம் எனில் ஆண்டு வட்டிவீதம் யாது?

a. $6\frac{1}{3}\%$ **b.** $6\frac{2}{3}\%$ c. $5\frac{1}{3}\%$ d. $5\frac{2}{3}\%$ e. விடை தெரியவில்லை

78. If the ratios formed using the numbers 2, 5, x, 20 in the same order in proportion, then 'x' is

a. 50 b. 4 c. 10 **d. 8** e. Answer not known

2, 5, x, 20 ஆகிய எண்களை அதே வரிசையில் பயன்படுத்தி அமையும் விகிதங்கள் விகித சமமாக இருப்பின் 'x'= ?

a. 50 b. 4 c. 10 **d. 8** e. விடை தெரியவில்லை

79. If $A = 2^{65}$ and $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \ldots + 2^0$

Which of the following is true?

a. B is $2^{64}$ more than A b. A and B are equal

c. B is larger than A by 1 **d. A is larger than B by 1**

e. Answer not known

$A = 2^{65}$ மற்றும் $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \ldots + 2^0$ எனில் கீழ்க்கண்டவற்றில் எது சரியான கூற்று?

a. B ஆனது A யைவிட $2^{64}$ அதிகம் b. A மற்றும் B சமம்

c. B ஆனது A யை விட 1 அதிகம் d. A ஆனது B யை விட 1 அதிகம்

e. விடை தெரியவில்லை

80. How many rectangles are there in standard chess board?

a. 204 b. 240 **c. 1296** d. 1290 e. Answer not known

சதுரங்கப் பலகையில் மொத்தம் எத்தனை செவ்வகங்கள் உள்ளன?

a. 204 b. 240 **c. 1296** d. 1290 e. விடை தெரியவில்லை

81. If 48 men working 7 hours a day can do a work in 24 days then in how many days will 28 men working 8 hours a day can complete the same work?

a. 28 days b. 30 days c. 32 days
**d. 36 days** e. Answer not known

48 ஆண்கள் ஒரு வேலையை நாளொன்றுக்கு 7 மணி நேரம் வேலை செய்து 24 நாட்களில் முடிப்பர் எனில், 28 ஆண்கள் அதே வேலையை நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்து எத்தனை நாட்களில் முடிப்பர்?

a. 28 நாட்கள் b. 30 நாட்கள் c. 32 நாட்கள்
d. 36 நாட்கள் e. விடை தெரியவில்லை

82. The standard deviation of a data is 3. If each value is multiplied by 5 then find the new variance.

a. 3 b. 15 c. 5 **d. 225** e. Answer not known

ஒரு தரவின் திட்ட விலக்கமானது 3. ஒவ்வொரு மதிப்பையும் 5-ஆல், பெருக்கினால் கிடைக்கும் புதிய தரவின் விலக்க வர்க்கச் சராசரியைக் காண்க.

a. 3 b. 15 c. 5 **d. 225** e. விடை தெரியவில்லை

83. In a certain code language 'ANIMALS' is written as 'SLAMINA'. How is ONLINE written in that code?

**a. ENILNO** b. OLINEN c. LNOINE
d. NNLOIE e. Answer not known

குறியீட்டு மொழியில் 'ANIMALS' என்பதை 'SLAMINA' என குறியிட்டால் ONLINE என்பதை எவ்வாறு குறியிடலாம்?

**a. ENILNO** b. OLINEN c. LNOINE
d. NNLOIE e. விடை தெரியவில்லை

84. If 5 persons can do 5 jobs in 5 days. Then 50 persons can do 50 jobs in ____ days.

a. 1 **b. 5** c. 10 d. 20 e. Answer not known

5 நபர்கள் 5 வேலைகளை 5 நாட்களில் செய்து முடிப்பர் எனில் 50 நபர்கள் 50 வேலையை _______ நாட்களில் முடிப்பர்.

a. 1 **b. 5** c. 10 d. 20 e. விடை தெரியவில்லை

85. A cement factory makes 7000 cement bags in 12 days with the help of 36 machines. How many bags can be made in 18 days using 24 machines?

a. 4320 b. 2880 c. 6480 **d. 7000** e. Answer not known

ஒரு சிமெண்ட் தொழிற்சாலையானது 36 இயந்திரங்களின் உதவியுடன் 12 நாட்களில் 7000 சிமெண்ட் பைகளை தயாரிக்கிறது. 24 இயந்திரங்களைப் பயன்படுத்தி 18 நாட்களில் எத்தனை சிமெண்ட் பைகளைத் தயாரிக்கலாம்.

a. 4320 b. 2880 c. 6480 **d. 7000** e. விடை தெரியவில்லை

86. A Cubical tank can hold 64,000 litres of water. Find the length of its side in metres.

a. 64m b. 8m **c. 4m** d. 16m e. Answer not known

ஒரு கனச்சதுர வடிவ நீர்த தொட்டியானது 64,000 லிட்டர் நீர் கொள்ளும் எனில் அந்தத் தொட்டியின் பக்கத்தின் நீளத்தை மீட்டரில் காண்க.

a. 64m b. 8m **c. 4m** d. 16m e. விடை தெரியவில்லை

87. The ratio of the volumes of two cone is 2 : 3. Find the ratio of their radii if the height of second cone is double the height of the first.

**a. $2 : \sqrt{3}$** b. 2 : 3 c. $\sqrt{2} : 3$ d. $\sqrt{2} : \sqrt{3}$ e. Answer not known

இரு கூம்புகளுடைய கன அளவுகளின் விகிதம் 2 : 3 ஆகும். இரண்டாம் கூம்பின் உயரம் முதல் கூம்பின் உயரத்தைப் போல இருமடங்கு எனில், அவற்றில் ஆரங்களின் விகிதம் காண்க.

**a. 2 : $\sqrt{3}$** b. 2 : 3 c. $\sqrt{2}$:3 d. $\sqrt{2}:\sqrt{3}$ e. விடை தெரியவில்லை

88. The value of a motorcycle two years ago was Rs. 70,000. It depreciates at the rate of 4% p.a. Find its present value
a. 64510 b. 64150 **c. 64512**
d. 64251 e. Answer not known
ஓர் இரு சக்கர வாகனத்தின் விலை இரண்டு ஆண்டுகளுக்கு முன் ரூ. 70,000 ஆக இருந்தது. அதன் மதிப்பு ஆண்டுதோறும் 4% குறைகிறது எனில் அதன் தற்போதைய மதிப்பைக் காண்க.
a. 64510 b. 64150 **c. 64512**
d. 64251 e. விடை தெரியவில்லை

89. Which of the following is true?
a. $A-B=A\cap B$ b. $A-B=A\cup B$ c. $(A\cup B)'=A'\cup B'$
**d.** $(A\cap B)'=A'\cup B'$ e. Answer not known
கீழ்கண்டவற்றில் எது சரி?
a. $A-B=A\cap B$ b. $A-B=A\cup B$ c. $(A\cup B)'=A'\cup B'$
**d.** $(A\cap B)'=A'\cup B'$ e. விடை தெரியவில்லை

90. _____ is the ratio of Helium-Neon mixture in the He : Ne Laser.
a. 1 : 5 **b. 5 : 1** c. 1 : 10 d. 1 : 1 e. Answer not known
He : Ne லேசரில், ஹீலியம் மற்றும் நியான் கலவையின் விகிதம் _____ ஆகும்.
a. 1 : 5 **b. 5 : 1** c. 1 : 10 d. 1 : 1 e. விடை தெரியவில்லை

91. Find the simple interest on Rs. 25,000 at 8% per annum for 3 years?
a. Rs. 4,500 b. Rs. 5,000 c. Rs. 5,500
**d. Rs. 6,000** e. Answer not known
ரூ. 25,000 க்கு 8% வட்டி வீதத்தில் 3 ஆண்டுகளுக்கு தனிவட்டி காண்க.
a. Rs. 4,500 b. Rs. 5,000 c. Rs. 5,500
**d. Rs. 6,000** e. விடை தெரியவில்லை

92. If Rs. 1,600 is divided among A and B in the ratio 3 : 5 then, B's share is
a. Rs. 480 b. Rs. 800 **c. Rs. 1,000**
d. Rs. 200 e. Answer not known
ரூ. 1,600 தொகையை A மற்றும் B ஆகியோர் 3 : 5 விகிதத்தில் பிரித்து கொண்டால் B ன் பங்கு
a. Rs. 480 b. Rs. 800 **c. Rs. 1,000**
d. Rs. 200 e. விடை தெரியவில்லை

93. For every 12 Mangoes that I buy, 3 turn out to be rotten. At this rate, how many rotten mangoes will I have if I buy 100 mangoes?
a. 24 b. 15 **c. 25** d. 35 e. Answer not known
நான் வாங்கும் ஒவ்வொரு 12 மாம்பழங்களில், 3 அழுகிப் போய்விடும் எனில் நான் 100 மாம்பழங்களை வாங்கினால் எத்தனை அழுகிய மாம்பழங்கள் இருக்கும்?
a. 24 b. 15 **c. 25** d. 35 e. விடை தெரியவில்லை

94. The LCM of two numbers is 6 times their HCF. If the HCF is 12 and one of the numbers is 36, then find the other number
a. 8 b. 48 c. 16 **d. 24** e. Answer not known
இரு எண்களின் மீ.பொ.ம. (LCM) ஆனது மீ.பெ.கா. -வின் 6 மடங்காகும். மீ.பெ.கா 12 மற்றும் ஓர் எண் 36 எனில் மற்றோர் எண்ணைக் காண்க.

a. 8 b. 48 c. 16 **d. 24** e. விடை தெரியவில்லை

95. L.C.M of $x^4 - 16$, $x^2 - 4x + 4$ is
**a. $(x - 2)^2(x + 2)(x^2 + 4)$** b. $(x - 2)(x + 2)^2 (x^2 + 4)$ c. $(x - 2)^2 (x + 2)^2 (x^2 + 4)$
d. $(x - 2) (x + 2) (x^2 + 4)$ e. Answer not known
$x^4 - 16$, $x^2 - 4x + 4$ -இன் மீ.பொ.ம ______ ஆகும்.
**a. $(x - 2)^2(x + 2)(x^2 + 4)$** b. $(x - 2)(x + 2)^2 (x^2 + 4)$ c. $(x - 2)^2 (x + 2)^2 (x^2 + 4)$
d. $(x - 2) (x + 2) (x^2 + 4)$ e. விடை தெரியவில்லை

96. The L.C.M of 148 and 185 is
a. 690 b. 760 c. 1010 **d. 740** e. Answer not known
148, 185 என்ற எண்களின் மீச்சிறு பொது மடங்கு (மீ.பொ.ம)
a. 690 b. 760 c. 1010 **d. 740** e. விடை தெரியவில்லை

97. HCF of $24x^2 y^3$ and $16 x^3 y^4$ is
a. $2^3 x^3 y^2$ b. $3^2 x^3 y^2$ **c. $2^3 x^2 y^3$**
d. $x^3 y^2$ e. Answer not known
$24x^2 y^3$ மற்றும் $16 x^3 y^4$ ன் மீ.பொ.கா _____ ஆகும்.
a. $2^3 x^3 y^2$ b. $3^2 x^3 y^2$ **c. $2^3 x^2 y^3$**
d. $x^3 y^2$ e. விடை தெரியவில்லை

98. If $(x - 6)$ is the HCF of $x^2 - 2x - 24$ and $x^2 - kx - 6$ then the value of K is
a. 3 b. 5 c. 6 d. 8 e. Answer not known
$x^2 - 2x - 24$ மற்றும் $x^2 - kx - 6$ யின் மீ.பொ.வ. $(x - 6)$ எனில் K யின் மதிப்பு
a. 3 b. 5 c. 6 d. 8 e. விடை தெரியவில்லை

99. Find the value of 63% of $3\frac{4}{7}$
**a. 2.25** b. 2.40 c. 2.50 d. 2.75 e. Answer not known
மதிப்பு காண்க : $3\frac{4}{7}$ இன் 63%
**a. 2.25** b. 2.40 c. 2.50 d. 2.75 e. விடை தெரியவில்லை

100. Ranjith's total income was Rs. 7,500. He saved 25% of his total income, find the amount saved by him
a. Rs. 2,500 **b. Rs. 1,875** c. Rs. 5,625
d. Rs. 5,000 e. Answer not known
இரஞ்சித்தின் மாத வருமானம் ரூ. 7,500 அதில் 25% ஐ சேமித்தார் எனில் அவர் சேமித்த தொகை
a. Rs. 2,500 **b. Rs. 1,875** c. Rs. 5,625
d. Rs. 5,000 e. விடை தெரியவில்லை